**செ. கு. எண்: 027** **நாள்: 19.02.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**</u>

<u>அவர்களின் அறிக்கை – **19.2.2018**</u>

**திருவண்ணாமலை மாவட்டம்,** செங்கம் வட்டம், **குப்பநத்தம் நீர்த்தேக்கத்திலிருந்து**, 2018 ஆம் ஆண்டு பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட கோரி வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, **திருவண்ணாமலை மாவட்டம்,** செங்கம் வட்டம், **குப்பநத்தம் நீர்த்தேக்கத்திலிருந்து** பாசனத்திற்காக 47 ஏரிகளுக்கு **21.2.2018 முதல் 18.3.2018 வரை** மொத்தம் 517.62 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டத்தில் உள்ள **9728.04 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**